பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 17 செவ்வாய்க்கிழமை 02.09.2025 கதிர் 296

### இனி இது ரகசியம் அல்ல!

அரசுத் தலைவர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சென்றபோது இடம்பெற்ற நிகழ்வுகள் தொடர்பில் சமூக ஊடகப் பரப்பில் சிலர் சிலாகித் திருந்தனர். அநுரகுமார திறந்து ☞2

## யாழ். மின் நூலகத் திட்டம் அநுர தொடக்கி வைத்தார்

யாழ்ப்பாண நூலகத்தை மின் நூலகமாக (e-library) அபிவிருத்தி செய்யும் திட்டம் நேற்றுக் காலை அரசுத் தலைவர் அநுரகுமார தலைமையில் தொடங்கப்பட்டது.

அதன்படி, யாழ்ப்பாண பொது நூலகத்திற்காக jaffna.dlp.gov.lk என்ற இணையத்தளம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த திட்டம் யாழ்ப்பாண பொது நூலகத்தில் உள்ள புத்தகங்களை இணையவெளியில் வாசிக்க வாய்ப்பளிக்கும்.

யாழ்ப்பாண மக்களின் பெருமையின் அடையாளமாக விளங்கும் யாழ்ப்பாண பொது நூலகம், ஆசியாவிலேயே மிகப்பெரிய புத்தகங்களின் தொகுப்பைக் கொண்ட நூலகமாகும். பாடசாலை மற்றும் பல்கலைக்கழக ☞3

## சர்வதேச விளையாட்டு நகரமாக மண்டைதீவை மாற்றத் திட்டம்

### அரசுத் தலைவர் நேற்று தொடக்கி வைத்தார்

யாழ்ப்பாணம் மண்டைதீவில் நிர்மாணிக்கப்படும் யாழ் சர்வதேச கிரிக்கட் மைதானத்தின் நிர்மாணப்பணிகளை நேற்று பிற்பகல் அரசுத் தலைவர் அநுரகுமார ☞3

# செம்மணி - 218

செம்மணி மனித புதைகுழிகளில் தற்போது தோண்டப்பட்டுவரும் அரியாலை சிந்துப்பாத்தி இந்து மயானப் புதைகுழிகளிலிருந்து நேற்றும் புதிதாக 9 பேரின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றுடன் சேர்த்து இதுவரையில் 218 பேரின் எலும்புக் கூடுகள் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் நீதிவான் மன்றத்தின் உத்தரவின் பேரில் தோண்டப்பட்டுவரும் இந்தப் புதைகுழிகளில் தற்போது இரண்டாம் கட்டமாகப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்தப் பணிகளுக்கு 45 நாட்கள் கால அவகாசம் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டிருக்கிறது. அதில்





40 நாள் பணிகள் நிறைவுபெற்றுள்ளன.

அகழ்வுப் பணிகளின் இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வு பணிகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டன. நேற்று 8ஆவது நாளாகத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய தினம் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் 7 முற்றிலுமாக அகழ்ந்தெடுக்கப்பட்டு நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டன. இவற்றுடன் 198 எலும்புக்கூடுகள் மற்றும் மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. ☞3

# புதைகுழிகள் குறித்து மிகவும் வெளிப்படையான விசாரணை

### அரசுத் தலைவர் அநுரகுமார தெரிவிப்பு

**மண்ணைத் தோண்டும்போது, பழைய எலும்புக்கூடுகள் வெளிப்படுகின்றன என்பதை நான் அறிவேன். இப்போது, செம்மணிப் பகுதியில் உள்ள புதைகுழிகள் குறித்து மிகவும் வெளிப்படையான விசாரணையை நடத்தி வருகிறோம், இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுபோன்ற புதைகுழிகள் மீண்டும் உருவாகாத நாட்டை உருவாக்குவதே எங்கள் எதிர்பார்ப்பாகும் என்று அரசுத் தலைவர் அநுரகுமார தெரிவித்தார்.**

**தற்போதைய ஆளும்தரப்பின் முன்னுரிமைத் திட்டமாக டிஜிட்டல் மயமாக்கலுடன், இவ்வளவு காலமும் கொழும்பிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் தொலைதூர கிராமங்களுக்குப் பரவலாக்கப்பட்டு, ஆளும்தரப்பினால் பெற்றுக்கொள்ளப்படவேண்டியபணிகளை, மிக நெருக்கமாக பெற்றுக்கொள்ள மக்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்று அரசுத்தலைவர்மேலும்குறிப்பிட்டார்.** ☞2

## கச்சதீவிற்கு அநுரகுமார கண்காணிப்புப் பயணம்

யாழ்ப்பாணத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களைத் தொடக்கி வைக்கும் நிகழ்வுகள் மற்றும் திறப்பு விழாக்கள் என்பவற்றில் நேற்றுப் பங்கேற்ற அரசுத் தலைவர் அநுரகுமார, யாழ்ப்பாணத்தில் உள்ள கச்சதீவிற்கு கண்காணிப்புப் பயணம் ஒன்றை மேற்கொண்டார்.

நேற்று யாழ்ப்பாணம் வந்த அவர், காலையில் நடந்த நிகழ்வில் பேசும்போது, கச்சதீவைப் பற்றிப் பலவும் பேசப்படுகின்றன, அது எங்களுடைய நிலம், அதனைப் பாதுகாப்பது எனது பணி, அங்கு இன்று செல்லப்போகின்றேன் என்று தெரிவித்திருந்தார்.

அதன்படியே கச்சதீவிற்குச் சென்ற அநுரகுமார அங்கு நிலைகொண்டுள்ள இலங்கைக் கடற்படையினருடன் அளவளாவினார். கச்சதீவு அருகே மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் செயற்பாடுகள் பற்றியும் அவர்களுடன் கலந்துரையாடினார்.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால, வடக்கு கடற்படைக் கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் புத்திக லியனகமகே ஆகியோரும் இந்த விஜயத்தில் இணைந்து கொண்டனர்.

## இந்திய நிதியமைச்சர் நிர்மலாவுடன் மிலிந்த மொறகொட நேற்று சந்திப்பு

பாத்பைன்டர் பவுன்டேஷனின் நிறுவுனரும், இந்தியாவுக்கான இலங்கையின் முன்னாள் உயராணையருமான மிலிந்த மொறகொட நேற்று இந்திய நிதியமைச்சர் நிர்மலாவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்திய அரசியல் தலைவர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுடன் அண்மைக்காலத்தில் அவர் நடத்திவரும் சந்திப்புக்களின் ஓரங்கமாகவே நிதியமைச்சர் நிர்மலாவுடனான சந்திப்பு நேற்று புதுடில்லியில் நடைபெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது சமகாலத்தில் சர்வதேச பொருளாதாரத்தில் தாக்கங்களை ஏற்படுத்திவரும் பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகள் குறித்தும், அவற்றின் விளைவாக எதிர்வருங்காலத்தில் ☞3

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கெதிரான

## நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான சபாநாயகரின் மௌனத்தில் சந்தேகம்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தைதவிர்ப்பதற்கு ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. இந்த விடயத்தில் சபாநாயகரின் மௌனம் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் வழங்கப்பட்ட எந்தவொரு வாக்குறுதியும் ஆளும்தரப்பால் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இவ்வாறான நிலைமையில்தான் தாக்குதல்கள் நடைபெற்றபோது கிழக்கு கட்டளைத் தளபதியாகச் செயற்பட்டவர் இன்று பிரதி பாதுகாப்பு அமைச்சராக பதவி வகிக்கின்றார். இதனை அடிப்படையாகக் கொண்டே சகல எதிர்க்கட்சிகளும் இணைந்து அவருக்கெதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை சமர்ப்பித்தன. ஆனால் சபாநாயகரால் இதுவரை இது தொடர்பில் எந்தவொரு அறிவித்தலும் வழங்கப்படவில்லை.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு புறம்பானதல்ல என சட்டமா அதிபர் சபாநாயகருக்கு அறிவித்திருக்கின்றார். எனவே இது குறித்த விவாதத்துக்கு பொருத்தமான தினமொன்றை சபாநாயகரால் ஒதுக்க முடியும். இது தொடர்பில் விவாதம் முன்னெடுக்கப்படவேண்டியது அவசியமாகும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த விசாரணைகள் தொடர்பில் ☞3

## கனடாவின் பிரம்டன் நகரிலும் 'விடுதலை நீர்' சேகரிப்பு நிகழ்வு

கனடா, ஒன்றாரியோ மாகாணத்தின் பிரம்டன் நகரத்தில் அமைந்துள்ள தமிழின அழிப்பு நினைவக வளாகத்தில், கனேடிய தமிழர் தேசிய அவை அமைப்பின் ஏற்பாட்டில் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி 'விடுதலை நீர் சேகரிப்பு' நிகழ்வு உணர்வுபூர்வமாக இடம்பெற்றுள்ளது.

தமிழ் இனத்தின் விடுதலை உள்ளடங்கலாக தமிழ் அரசியல் கைதிகளின் விடியலுக்கான குறியீடாக இலங்கையில் குரலற்றவர்களின் குரல் அமைப்பினால் ☞3

## பேருந்துக் கட்டணம் குறையாது

மாதாந்த எரிபொருள் விலைக்குறைப்புக்கமைய பேருந்து கட்டணத்தை குறைக்க முடியாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. அதேபோல் முச்சக்கர வண்டி கட்டணத்தையும் குறைக்க முடியாது என்று அகில இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம் அறிவித்துள்ளது.

மாதாந்த எரிபொருள்; விலைச்சூத்திரத்துக்கமைய ஞாயிறுக்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் ஒக்டேன் 92 ரக பெற்றோலின் விலை 06 ரூபாவினாலும், சுபர் டீசலின் விலை 12 ரூபாவினாலும், டீசலின் விலை 06 ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வைத்த அல்லது தொடக்கிவைத்த திட்டங்களில் அதற்கான பெயர்ப் பலகைகளில் அவரது பெயர் குறிப்பிடப்படவில்லை என்பதும் அந்தப் பலகைகளில் தமிழில் முதலில் எழுதப்பட்டிருந்தது என்பதே அவர்களின் சிலாகிப்புக்குக் காரணம். சிலர் இதனையே எதிர்பார்க்கப்பட்ட 'மாற்றம்' என்றும் எழுதியிருந்தார்கள்.

உண்மையிலேயே ஆளும்தரப்பான என்பிபியிடம் இவையெல்லாம் கொள்கையளவிலான மாற்றங்களாக இருந்தால் அவை வரவேற்கப்படவேண்டியதுதான். அதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் கடைசியில் மண்டையில் இருந்த கொண்டையை மறந்த கதையாக மயிலிட்டியில் அநுர அணியினர் நடந்துகொண்ட விதம் தெற்கின் அரசியலில் மாற்றம் எதுவும் நிகழவில்லை என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்திவிட்டது.

நேற்று மயிலிட்டியில் மீன்பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் மூன்றாம் கட்டப் பணிகளை அரசுத் தலைவர் தொடக்கி வைத்தார். இந்த நிகழ்வில் மதகுருமார் எவரும் கலந்துகொள்ளவில்லை. பொதுவா இதுபோன்ற நிகழ்வுகளில் அனைத்து மதகுருமார்களும் ஆசி வழங்குவதற்காக அழைக்கப்பட்டிருப்பார்கள். இந்த நிகழ்வில் மதகுருமார்கள் ஏன் இல்லை என்பதை அறிய முயற்சித்தபோதே என்பிபி ஆளும்தரப்பு தன் கொண்டையை மறந்துவிட்டிருந்தமை அப்பட்டமாகத் தெரியவந்தது.

மயிலிட்டி இறங்குதுறை அதிகாரிகளால், நிகழ்வுக்கு வருமாறு அப்பகுதி இந்து மதகுரு மற்றும் கிறிஸ்தவ பாதிரியாருக்கு ஏற்கனவே அழைப்பிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால், கடைசியில் அவர்களை நிகழ்வுக்கு வந்துவிடாதீர்கள் என்று யாழ். மாவட்டச் செயலக அதிகாரிகள் கெஞ்சி மன்றாடித் தடுத்துள்ளனர்.

அதற்கான காரணமாக அவர்களால் சொல்லப்பட்டிருப்பது, நிகழ்விற்கு இந்து, கிறிஸ்தவ மதகுருமார்களை அழைத்தால் மயிலிட்டியில் இருக்கும் விகாராதிபதியையும் அழைக்கவேண்டும். அப்படி அழைத்தால் அது சர்ச்சைக்குரியதாகிவிடும் என்பதால் யாரையும் அழைக்கவேண்டாம் என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றார்களாம்.

மயிலிட்டி விகாராதிபதியை மேடைக்கு அழைப்பது யாழ்ப்பாணத்தில் தமது அரசியல் செல்வாக்கை மழுங்கடிக்கும் என்ற ஆளும்தரப்பான என்பிபி பயந்ததன் காரணமாகவே அவரை அழைக்காமல் தடுத்தார்கள். இதுவரைக்கும் எல்லாமும் சரிதான். என்பிபி யாழ்ப்பாணத்தில் அரசியல் செய்ய விரும்புகிறது. எனவே இங்குள்ள மக்களின் விருப்பத்திற்கு மாறாகத் தாம் நடந்துகொள்ளாமல் இருப்பதில் கவனம் கொள்கிறது என்கிற வரைக்கும் சரி. ஆனால், அதற்காக மற்றைய மதத் தலைவர்களையும் நிகழ்வில் கலந்துகொள்ளாமல் தடுத்ததில்தான் தனது இனவாத அணுகுமுறைக் கொண்டையை மறந்துவிட்டது அநுர தரப்பு.

பௌத்த மதகுருவை அழைக்காத ஒரு அரச நிகழ்விற்கு இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மத குருக்களையும் அழைக்கக்கூடாது என்று அவர்கள் முடிவெடுத்த தருணத்தில் அவர்களின் இனவாதக் கொண்டை வெளிப்பட்டுவிட்டது. அதிலும் ஒரு தவறான விகாரையின் மதகுருவைத் தவிர்ப்பதற்காக சரியான, நியாயமான மதகுருக்களைத் தவிர்த்திருக்கின்றமை பேரினவாதத்தின் அப்பட்டமான வெளிப்பாடு.

மயிலிட்டி விகாரை தனியார் காணிகளை ஆக்கிரமித்து அனுமதியின்றி, அரச படையினரின் அதிகாரத் துஸ்பிரயோகத்துடன் கட்டப்பட்டுள்ளது. அமைச்சர்கள் பலர் அதற்குத் தீர்வு தருவதாகச் சொல்லியும் தீர்வு தரப்படவில்லை. அந்த விகாரை சட்டவிரோதமாக் கட்டப்பட்டுள்ளது என்பது அமைச்சர்கள் உட்பட அனைவருக்கும் தெரிகிறது. ஆனாலும் அதனை அவர்களால் அகற்ற முடியவில்லை. குறைந்தபட்சம் அந்த விகாரையின் மதகுருவைக்கூடத் தடுக்க முடியவில்லை. காரணம், அப்படிச் செய்தால் சிங்கள பௌத்தர்கள் மத்தியில் தமது அரசியல் செல்வாக்குச் சரிந்துவிடும் என்பதுதான்.

என்னதான் தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் அனைவரும் சமமாக ஒற்றுமையாக வாழும் நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்று அரசுத் தலைவரும் அமைச்சர்களும் மேடைகளில் வாய் கிழியக் கத்தினாலும் அவர்களால் அதைச் செய்யவே முடியாது, பேரினவாதத்திற்குள் அவர்கள் அமிழ்ந்து கரைந்துபோயுள்ளார்கள் என்பதுதான் யதார்த்த உண்மை. ஆனால் தமது அடிப்படை உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் தமிழ் மக்களையும் அரசியல்வாதிகளையும் இவர்கள் இனவாதிகள் என்று சாடுவார்கள். என்ன கொடுமை சரவணா!

..............................

அநுர ஆளும்தரப்பு ரணில் விக்கிரமசிங்கவைக் கைது செய்ததை அடுத்து, ரணிலுக்கும் சஜித்துக்கும் இடையில் இருந்த பகை விலகிக் கொண்டதுதான் நடந்த நல்ல காரியம். ரணில் கைது செய்யப்பட்டபோது சஜித் சிங்கப்பூரில் இருந்தார். செய்தியைக் கேட்டதும் தனது பயணத்தை விரைவாக முடித்துக் கொண்டு நாடு திரும்பினார். உடனடியாகச் சென்று ரணிலைப் பார்த்தார். அவரது கைது ஜனநாயகத்தின் கேடு என்று முழங்கினார். இதையடுத்து சஜித்தை ரணில் மன்னித்துவிட்டார் என்று செய்திகள் வந்தன. ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்து அதிலிருந்த பலரையும் தன்னோடு அழைத்துச் சென்று புதிய கட்சியைத் தொடங்கியது மட்டுமல்ல ஐதேகவை செல்லாக் காசாக்கிவிட்ட சஜித்தின் மீது கடும் கோபத்தில் இருந்த ரணில் அவருக்கு எதிராகவும் அவரோடு சென்றவர்களுக்கு எதிராகுவம் கட்சிக்குள் பல தடைகளைப் போட்டிருந்தார்.

இப்போது அந்தத் தடைகள் எல்லாம் நீக்கப்பட்டு சஜித்தையும் அவரது ஆதரவாளர்களையும் நோக்கி நேசக்கரம் நீட்டத் தொடங்கியுள்ளார் ரணில். இதன் நீட்சியாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஐக்கிய தேசிய கட்சியின் வருடாந்த மாநாட்டில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. செப்டெம்பர் 6 ஐக்கிய தேசிய கட்சியின் மாநாடு இடம்பெறவுள்ளது. இதற்கே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ரணில் மன்னித்தார் என்பதற்காகவோ, அவர் அழைத்தார் என்பதற்காகவே எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடும் நிலையில் சஜித் இல்லை. ரணிலின் மாநாட்டு அழைப்பிற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் முகாமைத்துவக் குழு கூட்டத்தைக் கூட்டிப் பதிலளிக்கப்படும் என்று சஜித் தெரிவித்திருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சி மாநாட்டில் சஜித் பங்கேற்றால் அது இரு கட்சி ஆதரவாளர்கள் மத்தியிலும் ஒரு எழுச்சியை ஏற்படுத்தும் என்று சிலர் எதிர்பார்க்கின்றனர். ஆனால், வேறு சிலரோ சஜித் அப்படிச் சென்றால் ரணில் அவரை விழுங்கி ஏப்பம் விட்டுவிடுவார் என்றும் அஞ்சுகிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டுக்கு ஐக்கிய மக்கள் சக்திக்கு மட்டுமல்லாமல் ஏனைய கட்சிகளையும் அழைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாம். இந்த மாநாடு தொடர்பான ஆயத்த கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது. இதன் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் உறுப்பினர்களின் தடையை நீக்கவும், அவர்களை மீண்டும் கட்சிக்குள் சேர்த்துக்கொள்ளவும் அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாநாட்டை கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடத்தாமல் பொதுவான இடத்தில் நடத்தவும் உத்தேசிக்கப்பட்டது. அந்த வகையில் லேக்ஹவுஸ் கட்டடத்துக்கருகில் உள்ள ஜுபிலி மண்டபத்தில் காலை 9.30க்கு மாநாடு இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## புதைகுழிகள் .....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த அலுவலகம், நவீன தொழில்நுட்பம் உட்பட அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளது.

இதுவரை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மக்கள், குடிவரவு மற்றும் குடியகல்வு சேவைகளைப் பெறுவதற்கு, வட மாகாணத்தின் ஒரே பிராந்திய அலுவலகமான வவுனியா பிராந்திய அலுவலகத்திற்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருந்தது. வட மாகாணத்திலிருந்து கடவுச்சீட்டு விண்ணப்பங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், இலகுவாக அந்த சேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இந்த பிராந்திய அலுவலகம் திறக்கப்படுகிறது. யாழ்ப்பாண மக்களுக்கு குடிவரவு மற்றும் குடியகல்வு சேவைகள் வழங்குவதைக் குறிக்கும் வகையில், மூன்று கடவுச்சீட்டுகளை அரசுத் தலைவர் வழங்கி வைத்தார்.

பின்னர், யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ் மாவட்ட அரச அதிகாரிகளுடனான சந்திப்பில் கலந்து கொண்ட அரசுத் தலைவர், மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு, அரசியல் அதிகாரம் மற்றும் அரச அதிகாரிகள் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை மக்கள் நலனுக்காக பயன்படுத்தும் அரச அதிகாரிகளைப் பாதுகாக்க ஆளும்தரப்பின் நடவடிக்கை எடுத்து வரும் அதேவேளை, பணத்திற்காக அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தும் அரச அதிகாரிகளுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்தத் தயங்கமாட்டோம் என்று வலியுறுத்திய அரசுத் தலைவர், தற்போது, இந்நாட்டிலுள்ள அனைத்து அரச ஊழியர்களும் நாட்டிற்கான தங்கள் கடமையை நிறைவேற்ற வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு வலுவான அரச சேவை அவசியம் என்றும், உலகில் முன்னேற்றம் அடைந்த அனைத்து நாடுகளினதும் முன்னேற்றத்திற்குப் பின்னால் வலுவான அரச சேவை இருப்பதாகவும் அரசுத் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

நிகழ்வில் உரையாற்றிய அரசுத் தலைவர் அநுரகுமார தெரிவித்ததாவது:

இன்று, யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வு பிராந்திய அலுவலகத்திலிருந்து சேவைகளைப் பெறும் வசதியை நாங்கள் உருவாக்கியுள்ளோம்.

ஒரு அடையாள ரீதியாக குடிவரவு மற்றும் குடியகல்வு அனுமதிகளை வழங்குவதற்காக இது இருந்தபோதிலும், அதனை விடப் பெரும் நோக்கத்துடன் இந்தப் பணியில் நாம் தலையிட்டுள்ளோம். எமது முழு நிர்வாக அமைப்பும் கொழும்பை மையமாகக் கொண்டுள்ளது. தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பல பணிகளுக்காக கொழும்புக்குச் செல்ல வேண்டியுள்ளது.

இந்த நிர்வாகத்தை தொலைதூர கிராமங்களுக்கு பரவலாக்குவதே எமது ஆளும்தரப்பின் குறிக்கோள். ஆளும்தரப்பின் ஊடாக பெற்றுக்கொள்ள வேண்டிய பணிகளை தமக்கு மிக நெருங்கிய வகையில் மக்கள் பெற்றுக்கொள்ள வசதிகள் உருவாக்கப்பட வேண்டும்.

அடுத்த ஆண்டுக்குள் கணினி மென்பொருள் அமைப்புகள் மற்றும் உங்கள் தொலைபேசி மூலம் ஆளும்தரப்புடனான அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் மக்கள் மேற்கொள்ளக்கூடிய வகையில் வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் நாங்கள் செயல்பட்டு வருகிறோம். எமது ஆளும்தரப்பின் முதன்மையான செயற்பாடு டிஜிட்டல் மயமாக்கல் ஆகும். மேலும், அரச சேவையை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் அன்றைய தினம் நடைபெற்ற மாவட்டக் குழுக் கூட்டத்தில் ஏப்ரல் மாதம் கணிசமான அளவு சம்பள உயர்வை வழங்குவோம் என்று அறிவித்தேன். நாங்கள் அதைச் செய்தோம். எஞ்சியுள்ள பகுதியை அடுத்த ஜனவரியில் வழங்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம். இந்த நாட்டைக் கட்டியெழுப்ப ஒரு வலுவான அரச சேவை அவசியம். முன்னேறிய ஒவ்வொரு நாட்டிலும் வலுவான அரச சேவை உள்ளது. நமது நாட்டில் ஒரு வலுவான அரச சேவையை நாங்கள் உருவாக்கி வருகிறோம்.

மேலும், உங்கள் கையொப்பத்திற்கு ஒரு சக்தி உண்டு. அந்த கையொப்பம் மக்களுக்கு சேவை செய்ய பயன்படுத்தப்பட்டால், நாங்கள் உங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

ஆனால் அந்த கையொப்பம் பணத்திற்காக பயன்படுத்தப்பட்டால், சட்டம் அமுல்படுத்தப்படும். நம் நாட்டில் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டும் ஒரு அரசு நமக்குத் தேவை. நமது நாடு சட்டம் காட்டுமிராண்டித்தனமான ஒரு நாடாகவும், அரச நிறுவனங்களின் கௌரவம் அழிக்கப்பட்ட நாடாகவும் மாறியிருந்தது. மீண்டும் ஒவ்வொரு அரச நிறுவனத்திலும் கௌரவம் நிலைநிறுத்தப்பட வேண்டும். மேலும் ஒவ்வொரு அரச அதிகாரிக்கும் கௌரவத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும். அதற்காக, அந்த நிறுவனங்களுக்கு நாம் வசதிகளை வழங்கி வருகிறோம்.

நமது நாட்டை புதிதாகக் கட்டியெழுப்ப வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். இந்த வடமாகாணத்திற்கு எம்மிடம் பெரும் அபிவிருத்தித் திட்டம் உள்ளது. கடந்த அரசுத் தலைவர் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களில், வடக்கின் மக்கள் முதல் முறையாக ஆளும்தரப்பை அமைக்க வாக்களித்தனர். பிளவுபட்டு, ஒருவருக்கொருவர் அவநம்பிக்கை கொண்டிருந்த ஒரு நாடு, ஆளும்தரப்பின் மீது நம்பிக்கை வைத்தது. இப்போது நாம் செய்ய வேண்டியது, இந்த ஒன்றிணைவு வீழ்ச்சியடைய இடமளிக்காமல், அதை வலுப்படுத்தி, எதிர்காலச் சந்ததியினருக்கு ஒற்றுமை மற்றும் சகோதரத்துவம் நிறைந்த நாட்டைக் கட்டியெழுப்பவேண்டும்.

தோற்கடிக்கப்பட்ட அரசியல் சக்திகள் அதிகாரத்தைக் கைப்பற்ற இனவாதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்த முயற்சிக்கின்றன என்பதை நாம் அறிவோம். இன்று வடக்கு மற்றும் தெற்கிலும் இதே நிலை காணப்படுகிறது. வடக்கிலோ அல்லது தெற்கிலோ மேற்கொள்ளப்படும் இந்த இனவாத அரசியல் மக்களுக்காக அன்றி அரசியல்வாதிகளுக்காகவே மேற்கொள்ளப்படுகிறது என்பதை மறந்துவிடக்கூடாது. எனவே, வடக்கு மற்றும் தெற்கில் உள்ள நாம் அனைவரும் இந்த இனவாத அரசியலை நிராகரிக்கவேண்டும். இனவாதம் மீண்டும் எங்கும் தலை தூக்க அனுமதிக்கக்கூடாது. இதற்காக நாங்கள் மிகவும் கடினமாக உழைத்து வருறோம்.

ஆளும்தரப்பென்ற வகையிலும் தனிப்பட்ட ரீதியிலும் நாட்டில் மீண்டும் ஒரு போர் வராது என்று நாங்கள் நம்புகிறோம். போர் ஒன்றுவரும் என்ற சிந்தித்துச் சிலர் செயற்பட்டார்கள். மீண்டும் ஒரு போர் நடக்காமல் தடுக்க நாங்கள் உழைத்து வருகிறோம். மக்களுக்கு முடிந்தவரை காணிகளை வழங்க வேண்டும். மூடப்பட்ட வீதிகளைத் திறக்கவேண்டும். நாம் ஒருவரையொருவர் சந்தேகிக்கக்கூடாது. மற்றொரு போரைத் தடுக்க நாம் அனைவரும் பாடுபடுவோம் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அந்த மனநிலையுடன் நம் நாட்டைப் பார்க்கவேண்டும். நமது நாட்டை ஒரு புதிய சமூகத்தை நோக்கி இட்டுச் செல்லவேண்டும்.

பழைய தோல்வியுற்ற அரசியல் இயக்கங்கள், மதவாதம் மற்றும் சாதிவாதம் என்பவற்றைப் பயன்படுத்துகின்றன. அவை ஒரு நூற்றாண்டுக்கும் முந்திய காலத்திற்குரியவை. இன்று, இனம், மதம், சாதி அல்ல, மனிதநேயம்தான் பிரதான காரணி. எனவே, அனைத்து பிளவுகளும் மனிதநேயத்திற்கு அடிபணிய வேண்டும். மனிதநேயத்தை அனைத்தையும்விட உயர்வாக கருதும் ஒரு நாட்டை நாம் கட்டியெழுப்ப வேண்டும். அதுதான் நம் நாட்டின் மற்றும் உலகின் எதிர்காலமாகும்.

தற்சமயம், நம் நாட்டிற்கு அவசியமானவற்றை நாம் செய்து வருகிறோம். நமது மதத் தலைவர்கள், அரசியல் அதிகாரம், அரச அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு பிரதிநிதிகள், நாம் அனைவரும் ஒரே குறிக்கோளுடன் செயல்படுவோம். அரசியல் அதிகாரம் என்ற வகையில் நம் தரப்பில் இருந்து நம்மால் முடிந்த அனைத்தையும் செய்வோம். இந்த நாட்டை நாம் அனைவரும் ஒன்றாகக் கட்டியெழுப்புவோம் என்றார்.

## பேருந்துக்...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாவினாலும் குறைக்கப்பட்டது.

டீசலின் விலையை 06 ரூபாவினால் குறைப்பதால் பேருந்து கட்டணத்தை குறைக்க முடியாது என அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். வருடாந்த பேருந்து கட்டண திருத்தத்துக்கமைய கடந்த ஜுலை மாதம் திருத்தம் செய்யப்பட்டது.

தற்போதைய நிலையில் பேருந்து கட்டணத்தைக் குறைப்பதாயின் டீசலின் விலை 25 ரூபாவிலேனும் குறைக்கவேண்டும் என்றார்.

பெற்றோலின் விலை பெருமளவில் குறைக்கப்படவில்லை. இலவசமாக பெற்றோலை வழங்கினாலும் முச்சக்கர வண்டி கட்டணத்தை குறைக்க முடியாது. ஏனெனில் முச்சக்கர வண்டி கட்டண கண்காணிப்பு தொடர்பில் ஆளும்தரப்பிடம் முறையான கொள்கைத் திட்டம் ஏதும் கிடையாது என அகில இலங்கை முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடக்கி வைத்தார்.

நீண்டகாலத்திட்டத்தின்கீழ்,மண்டைதீவை சர்வதேச அளவிலான வசதிகளுடன்கூடிய 'விளையாட்டு நகரமாக' மாற்றுவதற்கான வேலைத்திட்டமும்இங்குமுன்வைக்கப்பட்டது.

நீச்சல் தடாகம், ஏனைய விளையாட்டு களுக்கான வசதிகளுடன்கூடிய இந்த விளையாட்டு நகரம் முழுமையான வசதிகளுடன்கூடிய உள்ளக விளையாட்டு வளாகத்தையும் நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள், சொகுசு அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகங்கள் மற்றும் பொழுதுபோக்கு மையங்களையும் கொண்டிருக்கும்.

யாழ்ப்பாணம்சர்வதேசகிரிக்கட்மைதானம் நான்குகட்டங்களாகநிர்மாணிக்கப்படவுள்ளது. முதற்கட்டமாக போட்டிகளை நடத்தும் வகையில் மைதானம் மற்றும் விளையாட்டு அரங்கு அமைக்கப்படவுள்ளது.

பிரதான பார்வையாளர்கள் அரங்கம் மற்றும்ஊடகஅரங்கம்இரண்டாம்கட்டத்திலும், மீதமுள்ள பார்வையாளர்கள் அரங்குகள் மூன்றாம் கட்டத்திலும் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இறுதி கட்டத்தில் மின்விளக்குக்கட்டமைப்புநிறுவப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வேலணை பிரதேச சபையால்இலங்கைகிரிக்கெட்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட காணியில் நிர்மாணிக்கப்படும் இந்தசர்வதேசகிரிக்கெட்மைதானத்தில், சுமார் 40,000 பார்வையாளர்கள் போட்டிகளை கண்டுகளிக்கும் வசதி ஏற்படுத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் சர்வதேச கிரிக்கெட் மைதானம், சர்வதேசஅளவிலானபகல்/இரவு போட்டிகளை நடத்தும் வசதிகளுடன் இலங்கையில் அமைக்கப்படும் ஐந்தாவது மைதானமாகவும், சர்வதேச போட்டிகளை நடத்தக்கூடிய ஏழாவது மைதானமாகவும் வரலாற்றில் இடம்பிடிக்கும்.

நிகழ்வில்உரையாற்றிய அரசுத்தலைவர் அனுரகுமார, கிரிக்கெட்என்பதுஇலங்கையின் பெருமையை உலகிற்கு எடுத்துச்சென்ற ஒரு விளையாட்டு என்று தெரிவித்தார்.

விளையாட்டுஅனைத்துத்தடைகளையும் வேறுபாடுகளையும் கடந்து மக்களை ஒன்றிணைக்கும் என்பதை வலியுறுத்திய அரசுத்தலைவர், இன்றுநிர்மாணிப்பணிகள் தொடங்கும் யாழ்ப்பாணம் சர்வதேச கிரிக்கெட்மைதானம்வெறும்ஒருமைதானம் மட்டுமல்ல, நாட்டில் ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு வாய்ப்பாகும் என்று சுட்டிக்காட்டினார்.

எதிர்காலத்தில் சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும்ஒருதேசிய கிரிக்கெட் அணியையும், அனைத்து இன மக்களும் ஒரே அரங்கில் ஆரவாரம் செய்யும் ஒரு நாட்டையும் உருவாக்குவதே தனது கனவு என்று கூறிய அரசுத் தலைவர், அதை நனவாக்க அனைவரும் கைகோர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த ஆண்டு இறுதிக்குள், யாழ்ப்பாணம் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் முதல் கிரிக்கெட் போட்டி நடைபெறும் என்றும், முதல்சர்வதேசபோட்டி03ஆண்டுகளுக்குள் நடைபெறும் என்றும் நம்பிக்கை தெரிவித்த அரசுத் தலைவர், விளையாட்டில் ஒரு திருப்புமுனையைக் குறிக்கும் வகையில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் எடுத்த இந்த நடவடிக்கையை பாராட்டி அதற்கு நன்றி தெரிவித்தார்.

## யாழ். மின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் மற்றும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுஆய்வாளர்கள்உட்படஏராளமான மக்களால் தினமும் பயன்படுத்தப்படுகிறது.

யாழ்ப்பாண பொது நூலகத்திற்கு ஒருங்கிணைந்த நூலக முகாமைத்துவக் கட்டமைப்புமற்றும்ஸ்மார்ட்அட்டைபிரவேச வசதிமற்றும்விசேடதேவைஉள்ளவர்களுக்கு உதவி தொழில்நுட்பத்துடன் கூடிய விசேட அலகும்இதன்போதுஅறிமுகப்படுத்தப்பட்டது.

2025 வரவு செலவுத் திட்டத்தில் இந்தத் திட்டத்திற்காக 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

மின் நூலகத் திட்டத்தை உத்தியோகபூர்வமாகத் தொடங்கி வைத்த அரசுத்தலைவர், அதன்வாசிப்புஅறைமற்றும் புத்தகம்வழங்கும்பிரிவுக்கும்விஜயம்செய்த அதே வேளையில், பணியாளர்களுடன் சுமூகமாக உரையாடலில் ஈடுபட்டார்.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் , உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள்,யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் , யாழ்ப்பாண நூலகர் மற்றும்பணியாளர்கள்இந்நிகழ்வில்கலந்து கொண்டனர்.

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படக்கூடியசவால்கள்குறித்தும்விசேடமாகக் கலந்துரையாடப்பட்டன.

அதேவேளை தற்போது நிலவும் உலகளாவியசவால்களுக்குமத்தியில்இந்தியப் பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மையைத் தொடர்ந்து பேணுவதற்கு பிரதமர் நரேந்திர மோடி மற்றும் நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன்வழங்கிவரும்தலைமைத்துவம் குறித்து மிலிந்த மொரகொட தனது பாராட்டை வெளிப்படுத்தியதுடன், அது பிராந்திய உறுதிப்பாடு மற்றும் வளர்ச்சிக்கு நேர்மறையாகப் பங்களிப்புச் செய்வதாகவும் சுட்டிக்காட்டினார்.

## நம்பிக்கையில்லாப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிந்துகொள்ள வேண்டிய உரிமை பொது மக்களுக்கு உண்டு.

இந்த விவகாரத்தில் சபாநாயகரின் மௌனம் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. நம்பிக்கையில்லா பிரேரணைக்கு அஞ்சப் போவதில்லை எனக் கூறும் ஆளும்தரப்பு அதனைவிவாதத்துக்குஎடுத்துக்கொள்வதற்கு ஏன் தயங்குகிறது?

ஜே.வி.பி.யின்தேசியபட்டியல்வேட்பாளரே இப்ராஹிம் ஆவார். இப்ராஹிம்மின் பிள்ளைகள் மற்றும் மருமகள் ஆகியோரே தற்கொலை குண்டுத் தாக்குதல்களின் பிரதான சந்தேகநபர்களாவர். இதற்கான நிதி உதவிகளை உள்நாட்டில் அவர்களே வழங்கியிருக்கின்றனர். ஆளும்தரப்பு இந்த விவாதத்தை தடுப்பதற்கு முயற்சிக்கின்றதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஆனால் அவ்வாறு தடுப்பதற்கு ஆளும்தரப்பிற்கு எந்த உரிமையும் கிடையாது என்றார்.

# தொடருந்து மோதியதில் தூக்கி வீசப்பட்ட 'பட்டா'

# மூவர் காயம்

கொழும்பில் இருந்து யாழ். நோக்கிச் சென்ற தொடருந்து வவுனியாவில் பட்டாரக வானத்துடன் மோதிய விபத்தில் மூவர் காயமடைந்தனர். அனைவரும் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிசார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து சென்ற தொடருந்து நேற்று மாலை 3.30 மணியளவில் வவுனியா - மன்னார் வீதி தொடருந்துக் கடவையை கடக்க முற்பட்டபோது மன்னார் வீதி ஊடாக வவுனியா நோக்கி வந்த பட்டாரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

தொடருந்து மோதியதில் தூக்கி வீசப்பட்ட வாகனத்தில்பயணித்ததாய், தந்தை, மகள் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக குறித்த வீதிப் பகுதியில் சுமார் அரை மணி நேரத்திறகும் மேலாக தொடருந்து தரித்து நின்றமையால் வவுனியா - மன்னார் வீதிப் போக்குவரத்துக்கள் பாதிப்படைந்தன.

தொடருந்துக் கடவை மூடப்பட்டிருக் கவில்லை எனவும் இதன் காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் வவுனியா பொலிசார் மேலதிகவிசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர்.

(100)

## கனடாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டுவரும் விடுதலை நீர் சேகரிப்பு நடவடிக்கைக்கு வலுச்சேர்க்கும் விதத்திலேயே பிரம்டன் நகரில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரம்டன் நகரபிதா உள்ளடங்கலாக அரசியல் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், புலம்பெயர் தமிழர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டிருந்தனர்.

அத்தோடு 'இனத்தின் பெயரால் வஞ்சிக்கப்பட்டு, இலங்கையின் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எமது உறவுகளின் விடுதலைக்காக தமிழ் மக்களாகிய நாம் மெய்யுணர்வுகொண்டுஉழைக்கவேண்டியது காலத்தின்கட்டாயமாகும்.அதன்படிதாயகத்தில் மாத்திரமன்றி, தமிழர்கள் செறிந்துவாழும் புலம்பெயர்நாடுகளின்ஒவ்வொருநகர,மாநகர சபைகளிலும் இதுபோன்ற விடுதலை நீர் சேகரிப்புநிகழ்வைஒருநூதனக்கவனயீர்ப்புப் போராட்டவடிவமாகமுன்னெடுக்கவேண்டும்' எனவும்ஏற்பாட்டாளர்களால்வலியுறுத்தப்பட்டுள்ளது.




காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை



உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கண்டனம்

இலங்கையின் அரசுத் தலைவர் அநுரகுமார நேற்று யாழ்ப்பாணம் வந்து பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைத் தொடக்கி வைத்தார். வடக்கு மக்களுக்குப் பயனளிக்கும் திட்டங்கள் தொடங்கப்படுவது நிச்சயமாக வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. வடக்கு நிலம் நீண்டகாலப் போர், அழிவுகள், இடம்பெயர்வுகள் என பல துயரங்களைச் சந்தித்த பிறகு, அமைதி சூழலில் அபிவிருத்திப் பயன்களை அடைவது மக்களின் இயல்பான விருப்பமாகும். எனவே அரசுத் தலைவரின் வருகையினால் தொடங்கப்பட்ட திட்டங்கள் மக்கள் வாழ்வில் சிறு நம்பிக்கையை விதைத்திருக்கின்றன என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

அதேநேரத்தில், அரசுத் தலைவர் தேர்தல் காலத்தில் தமிழ் மக்களுக்குவழங்கியிருந்த முக்கிய அரசியல் உறுதிமொழிகள் குறித்துப் பேசாமல் சென்றுவிட்டது மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்துகிறது. அதற்குக் கடுமையான கண்டனங்கள். தேர்தல் பரப்புரை மேடைகளில் அவர் தன்னிச்சையாகக் கூறிய வாக்குறுதிகள் இன்னமும் தமிழ் மக்களின் நினைவிலேயே இருக்கின்றன. அவை வெறும் தேர்தல் வாக்குறுதிகளாகவே இருந்துவிடக்கூடாது என்பதுதான் வடக்கு மக்களின் எதிர்பார்ப்பு.

முக்கியமாக, மாகாண சபை நிர்வாகம் குறித்த பிரச்சினையே எப்போதும் விவாதப்பொருளாக இருந்து வந்துள்ளது. அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் மாகாணங்களுக்கு வழங்கப்படவேண்டிய காவல்துறை மற்றும் காணி அதிகாரங்கள் ஆளும்தரப்பில் சார்பில் முழுமையாக வழங்கப்படவில்லை. தேர்தல் காலத்தில் அநுரகுமார கூறியது – 'தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகள் ஒரு நீடித்த அரசியல் தீர்வின் மூலம் நிறைவேற்றப்படும். மாகாண சபைகள் உண்மையான அதிகாரத்துடன் அமையும்' என்றதே. ஆனால் நேற்று அவர் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய உரைகளில் இதுபற்றி எவ்விதக் குறிப்பும் இடம் பெறவில்லை. இது தமிழர் மனதில் மேலும் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. மாகாண சபைத் தேர்தல் குறித்தும் அவர் வாய் திறக்கவில்லை.

அரசியல் கைதிகள் தொடர்பான பிரச்சினை இன்னொரு பெரும் வலியாகவே இருந்து வருகிறது. போருக்குப் பின்னர் பதினைந்துக்கும் அதிகமான ஆண்டுகள் கடந்தும், பல தமிழ் இளைஞர்கள் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாமலேயே சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். குடும்பங்கள் ஆண்டுக்காண்டு நீதியை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன. தேர்தலுக்கு முன்னர் இந்த பிரச்சினை குறித்து அநுரகுமார அளித்த வாக்குறுதி – 'அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவர், குடும்பங்களுக்கு நீதி வழங்கப்படும்' என்பதாகும். ஆனால் நேற்று அவரது யாழ்ப்பாணப் பயணத்தில் இது குறித்தும் எதுவும் பேசப்படவில்லை.

அதேபோல காணாமற்போனவர்களின் குடும்பங்கள் இன்னும் புலம்பிக் கொண்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கானோர் போருக்குப் பிறகு வீடு திரும்பவில்லை. அவர்களின் குடும்பங்கள் உண்மையை அறிந்து நீதி பெற வேண்டும் என்பதே கோரிக்கை. 'காணாமற்போனவர்களுக்கு உண்மையும் பரிகார நீதியும் அளிக்கப்படும்' என்ற அரசுத் தலைவர் முன்பே அளித்த வாக்குறுதி இன்று காற்றில் கரைந்துவிட்டது போல் தோன்றுகிறது. யாழ்ப்பாண வருகை போன்ற ஒரு முக்கிய தருணத்தில் அவர் இந்தக் கேள்வியை முற்றிலும் புறக்கணித்திருப்பது கடுமையான கண்டனத்திற்குரியது. காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இன்றும் வீதிகளிலேயே நீதிக்காகப் போராடியபடி காத்திருக்கிறார்கள்.

தமிழ் மக்களுக்கு அபிவிருத்தி தேவையில்லையா? நிச்சயமாக உள்ளது. ஆனால் அபிவிருத்தியோடு சேர்ந்து அரசியல் தீர்வும் அவசியம். சாலைகள், நீர்த் திட்டங்கள், கல்விக் கட்டடங்கள், விளையாட்டு வளாகங்கள் மக்கள் வாழ்வைச் சற்று எளிதாக்கும். ஆனால் நீதி இன்றி கிடைக்காத அபிவிருத்தி முழுமையான நம்பிக்கையைக் கொடுக்காது. அடிப்படைக் கோரிக்கைகள் 'அரசியல் தீர்வு, மாகாண சபை அதிகாரம், அரசியல் கைதிகள் விடுதலை, காணாமற்போனவர்களுக்கு நீதி' இவை புறக்கணிக்கப்படும் போது அபிவிருத்தி திட்டங்கள் வெறும் வெளிப்படையான நிகழ்ச்சிகளாகவே தெரியும்.

வடக்கு மக்களுக்கு எத்தனை முறை அரசியல் தலைவர்கள் வருகை தந்தாலும், உரைகள் நிகழ்த்தப்பட்டாலும், வாக்குறுதிகள் அளிக்கப்பட்டாலும், அவை நடைமுறையில் அமையாததுதான் இதுவரையில் புரையோடிப் போயிருக்கும் அரசியல். இந்த முறையும் அதே பிழை தொடர்வது போலத் தோன்றுகிறது.

ஆகவே, அரசுத் தலைவர் அநுரகுமார நினைவில் கொள்ள வேண்டியது– தமிழ் மக்களின் நம்பிக்கையை மீட்க விரும்பினால், திட்டங்களைத் தொடங்குவதில் மட்டும் அல்லாமல், அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் அநுர துணிச்சலுடன் முன்வரவேண்டும் என்பதையே. தேர்தல் கால வாக்குறுதிகள் வெறும் அரசியல் பேச்சாகவே இருந்துவிட்டால், மக்கள் மீண்டும் அவரை நம்பமாட்டார்கள். ஜனநாயகத் தேர்தல்களில் வாக்கு வாங்க வாக்குறுதிகள் அளித்து, பின்னர் அவற்றை மறந்து விடுவது ஜனநாயகத்தையும் மக்களின் நம்பிக்கையையும் தகர்க்கும் செயல். அபிவிருத்தித் திட்டங்களால் கிடைக்கும் சிறிய நிம்மதியும் பெரும் விரக்தியின் மத்தியில் மூழ்கிவிடும்.

# புலம்பெயர் மண்ணில் தமிழர் பெருமையை அடுத்த தலைமுறையினரும் அறியவேண்டும்

## நியூசிலாந்து நூல் வெளியீட்டில் உரை

புலம்பெயர் மண்ணில் தமிழின் பெருமையை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கடமை நமக்கு உள்ளது என்றும், எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் எழுத்துப்பணி இதற்கு உறுதுணையாக உள்ளது என்று இலக்கிய ஆர்வலர், ஆசிரியர் சண் வேலுப்பிள்ளை தெரிவித்தார்.

நியூசிலாந்து, ஒக்லாண்ட் மாநகரில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்கள் கடந்த வாரம் வெளியிடப்பட்டன. சிறப்புற நடைபெற்ற இந்நூல்கள் வெளியீட்டு விழாவில் நியூசிலாந்து வாழ் தமிழ் மக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

ஒக்லாண்ட் மாநகரில் உள்ள மவுண்ட் ரோஸ்கில் போர் நினைவு மண்டபத்தில் ஒகஸ்ட் 31 ஞாயிற்றுக்கிழமை மாலை ஆறு நூல்களின் வெளியீடு சிறப்புற நடைபெற்றது.

இந்த நூல் வெளியீட்டு விழாவின் தலைமை உரையில் அவர் பேசுகையில் கூறியதாவது:

புத்தகம் வாசிப்பு என்பது மிக முக்கியம் ஆகும். புத்தகங்கள் நம்மை சரியான திசையில் அழைத்து செல்லும். படிக்க, படிக்க சிந்தனைகள் விரிவாக்கும். புத்தகம் படிப்பதனால் நமது எதிர்கால தலைமுறையினர் சரியான திசையில் அழைத்து செல்லப்படுவார்கள் என நம்பலாம்.

எழுத்துக்கள் சமூக சிந்தனையை மேம்படுத்துகின்றன. அத்துடன் சமூக மக்களின் நலனுக்காக எழுத்தாளர்கள் எழுத வேண்டிய கடமையும் உள்ளது என்றும் எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நூல்கள் சர்வதேச விவகாரங்களை ஆவணப்படுத்துகின்றன என்றார்.

புலம்பெயர் மண்ணில் தமிழை மீட்டெடுக்க வேண்டிய கால கட்டத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். நமது மொழி, கலாசாரம் அழிந்துபோய்விடக்கூடாது. அதற்குஎழுத்தாளர்களின் பங்களிப்பு அவசியம்.

நமது ஈழத்து இலக்கியம், கருத்தாளமிக்க படைப்புக்கள் தமிழின் பெருமையை வெளிக்காட்டுகின்றன. அவற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கடமை நமக்கு உள்ளது என இந்நிகழ்வில் எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வரா தனது ஏற்புரையில் பேசினார்.

அறிமுக உரையை ரமேஷ் செல்வகுமார் நிகழ்த்தினார். அத்துடன் தமிழ் வாழ்த்துப் பாடலை ஒக்லாண்ட் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் சிறப்புற பாடினர்.

ஆறுநூல்களின்ஆய்வுரைகளைசிவசரவணபன் சர்வேஸ்வரன், பூபாலசிங்கம் பிரதீபன், கௌரிசங்கர் சுதந்திரபாலன், பிரேம்குமார் கந்தசாமி, வித்தியா நந்தகுமார் மற்றும் தமிழினி வாமதேவன் ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்வில் சிறப்புரையை மேவின் கொன்ஸ்ரன்ரைன் நிகழ்த்தினார்.

# மூதூர் மத்திய கல்லூரிக் கட்டடம் தீ விபத்தில் நேற்று முற்றாக சேதம்

மூதூரில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் மூதூர் மத்தியகல்லூரிக்கட்டடம்முற்றாகஎரிந்துநாசமானது.

பகல் 12.45 மணியளவில் மூதூர் மத்திய கல்லூரிக்கு சொந்தமான கட்டடத்திக்கு மேலாகச் சென்ற மின் இணைப்பு கம்பி அறுந்து வீழ்ந்ததில் இந்தவிபத்து இடம்பெற்றதாக அறியக்கிடைத்துள்ளது.

இதில் பாடசாலைக்குச் சொந்தமான கட்டடம் முற்றாக சேதமடைந்ததுடன் அந்தப் பகுதிக்கான மின்சாரமும் தடைப்பட்டது. பல வீடுகளுக்கான மின் இணைப்புக்களை வழங்கிய கம்பிகளும் தீயினால் சேதமடைந்துள்ளது.

# போராட்டத்தில் குதிப்போம் மட்டு. ஓட்டோ சாரதிகள் எச்சரிக்கை

*(சக்திவேல்)*

*மட்டக்களப்புமாவட்டம்களுவாஞ்சிகுடி பிரதேசத்தில் முச்சக்கர வண்டிகள் நிறுத்தும் நிலையங்களிலும், அதனை அண்மித்த ஏனை இடங்களிலும், வெளிபிரதேசங்களைச்சேர்ந்த முச்சக்கர வண்டி சாரதிகள் பயணிகளை ஏற்றிக்கொண்டு செல்கின்றார்கள். எமது முச்சக்கர வண்டிகள் நிறுத்தும் நிலையங்களுக்கே அவர்கள் இவ்வாறு வந்து பயணிகளை ஏற்றிச் செல்வதனால் எமக்கும் அவர்களுக்குமிடையில் பெரும் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. இதற்கான தீர்வு ஒன்றை பிரதேச சபையினர் உடனடியாகத் தரவேண்டும் என்று முச்சக்கரவண்டிச் சாரதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.*

*தமது பிரச்சினையை களுவாஞ்சிகுடி பொலிசார் மற்றும் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை ஆகியோருக்கு தெரியப்படுத்தியும் அவர்கள் இதற்கு இதுவரையில்எதுவிததீர்க்கமானதீர்வினையும் பெற்றுத்தர வில்லை என களுவாஞ்சிகுடி முச்சக்கர வண்டி சாரதிகளின் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.*

*இவ்விடையம் குறித்து நேற்று களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள முச்சக்கர வண்டி தரிப்பு நிலையத்தில் அச்சங்கத்தினர் ஒன்றுகூடிப்பேசினர். அதன்பின்னர் சங்கத்தின் தலைவர் கமலநாதன், மற்றும் செயலாளர் குவிந்தன் ஆகியோர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:*

*நாம் வெளிபிரதேசங்களிலிருந்து வரும் முச்சக்கரவண்டிகளை களுவாஞ்சிகுடி பிரதேசத்திற்கு வரவேண்டாம் எனக் கூறவில்லை. ஆனால் எமது பிரச்சினையை சரியான முறையிலும், நீதியான முறையிலும் அணுகி எவருக்கும் பங்கம் ஏற்படாதவாறு தீர்த்து வைப்பதற்கு மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை உடன் முன்வரவேண்டும். எமது வாழ்வாதாரம் மிகவும் பாதிப்படைந்துள்ளது. இந்நிலையில் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் எமது இப்பிரச்சனைக்கு தீர்வை மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை பெற்றுத்தரவிலலையாயின் களுதாவளையில் அமைந்துள்ள மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் முன்னால் எமது முச்சக்கர வண்டி சாரதிகள் அனைவரும் அமர்ந்து எமது எத்திர்ப்பை வெளிக்காட்ட வேண்டிய நிலமை ஏற்படும்.*

*மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் தவிசாளர் தலையீடு செய்து எமது பிரச்சனையை உடன் தீர்த்து தருமாறு வேண்டுகின்றோம். வேறு பிரதேச முச்சக்கர வண்டி சாரதிகளுக்கும் எமது முச்சக்கர வண்டி சாரதிகளுக்கும் இடையே கருத்து மோதல்கள் எற்பட்டு எதிர்காலத்தில் அது பெரும் பிரச்சனையாக உருவெடுக்கும் பட்சத்தில் அதற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம்.*

*களுவாஞ்சிகுடி முச்சக்கர வண்டி சாரதிகளின் பொறுப்புள்ள சங்கம் என்ற ரீதியில் இதற்கு உரிய அதிகாரிகளை நாடி தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு எம்மிடத்தில் உள்ளது. எனவே மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் தவிசாளர் எதிர் வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் இதற்குத் தீர்வைப் பெற்றுத் தரவேண்டும் இல்லையேல் எதிர்வரும் 10 ஆம் திகதி நாம் பிரதேச சபையின் முன்னால் அனைத்து முச்சக்கர வண்டி சாரதிகளும் அமர்வோம் என அவர்கள் இதன்போது தெரிவித்தனர்.*


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள்
ஆரம்பம்
20.04.2025
கற்கும் போதே
தொழில் ஆற்றக்
கூடிய வாய்ப்பு
●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
46, Brodie Lane , Jaffna.

காலைக்கதிர்
Kalaikkathir

# ஜனாதிபதி திறந்துவைக்கும் திட்ட கற்களில் நிதி தொடர்பான வெளிப்படைத்தன்மை இல்லை

## வலி கிழக்கு தவிசாளர் நிரோஷ்

ஜனாதிபதியினால் யாழில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான திறப்புவிழா கற்களில் நல்லாட்சிக்கு அவசியமான வெளிப்படைத்தன்மையும் தகவல் அறிவதற்கான சுதந்திரமும் மீறப்பட்டுள்ளது. ஆகவே அக் கற்கலில் காணப்படும் தவறுகள் உரியவாறு மறுசீரமைக்கப்படுவது மக்களின் தகவல் அறிந்து கொள்வதற்கான உரிமையினை உறுதிப்படுத்தும் என்பதுடன் அரச நிதி செலவிடப்படுவதன் வெளிப்படைத் தன்மையினையும் அதிகாரிக்கும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இன்றைய தினம் யாழிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி கடவுச்சீட்டு அலுவலகம்மற்றும்விளையாட்டுத்திடல்இ துறைமுகம் என்பவற்றின் ஆரம்பப் பணிகளை மேற்கொண்டார். அவரினால் கடந்த ஆட்சியாளர்களைப் போல் ஆரம்ப நிகழ்வுகளுக்கு பெரும் பணம் செலவிடப்படாமைஇ எளிமையான முறையில் மேற்படி நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டமையை நாம் வரவேற்கின்றோம். எனினும் நல்லாட்சித்தத்துவம் மீறப்பட்டுள்ளது.

இவ்விடத்தில் திறப்பு விழாக் கற்களில் மக்களின் பணம் என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. அரச நிதி என்பது மக்களின் பணம் ஆகும். அதனை தொகைகளைக் குறிப்பிடாது குறிப்பிட்டதனை நாம் அறிவார்ந்த பார்வையில் விசேடமான மாற்றம் என்று கூற முடியாது. அரச நிதியில் எவ்வளவு தொகை திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டது என்பது கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படாமல் விடப்பட்டமை அரசின் நிதி தொடர்பான வெளிப்படைத்தன்மையை கேள்விக்குள்ளாக்குகின்றது. நிதி செலவிடலில் தொகைகள் வெளியிடப்படும் போதே மக்களின் நிதி காத்திரமாகப் பயன்படுத்தப்ப்ட்டதா என பொதுமக்களால் விளங்கிக் கொள்ள முடியும். ஆகவே மக்கள் தகவல்களை பெறுவதற்கான வழிமுறையை இலகுபடுத்தவதில் அரசாங்கம் தோல்விகண்டுள்ளது கவலையளிக்கின்றது. பொது நிதி தொடர்பில்பொறுப்புச்சொல்வதற்கான அரசியல் பொருளாதார ரீதியானதும் நல்லாட்சியின் அளவு கோலுக்கான கல்விசார் அடிப்படையுமாகும்.




இலங்கை போன்ற நாடுகளில் அரசாங்கங்கள் திட்டங்களை ஆரம்பிப்பதும் பின்னர் கைவிடுவதும் சகஜமாகும். அவ்வாறான நிலைக்கு போதுமான நிதித்திட்டமிடல் இன்றி அபிவிருத்திகளை அரசியல் ரீதியில் ஆரம்பிப்பதும் ஒருகாரணமாகும். அடுத்து மேலதிக நிதியின்றியும் திட்டங்கள் தடைப்படுகின்றன. சில திட்டங்கள் சரியான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமையினால்தோல்வி அடைகின்றன. அவ்வாறான நிலையில் அப்படியாக தோல்வியடையும் கட்டுமாணங்கள் பற்றி கணக்காய்வு மேற்கொள்ளப்படும் அதேவேளை மக்களின் தீர்ப்பிற்கு அரசியல் தலைவர்கள் முகங்கொடுக்க வேண்டும் என்பது சனநாயக சம்புரதாயம். ஆகவே ஜனாதிபதின் பெயர் குறிப்பிடப்பிட்டால்திட்டத்தின் வெற்றி தோல்விகள் பற்றி மக்கள் மதிப்பிடுவது இலகுபடுத்தப்படும்.

திட்டங்களின்வெற்றிதொல்விகளின் பொறுப்புக்கூறலை வரலாற்று ரீதியில் தலைவர்கள் பெறுவர்கள் என்ற நியதியை உணர்த்தும். ஆகவே தலைவர்கள் சரியான நிபுணத்துவத்துடன் செயற்படுவதற்கு அது வழிநடத்தும். ஆகவே இவைகள் ஜனாதிபதியினால் யாழில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்ட கற்களில் மீறப்பட்டுள்ளன. எனவே இதுபற்றி அரசாங்கம் கவனத்தில் எடுத்து அவ் திறப்புவிழகக்கற்களின் அருகில் நிதி செலவு அல்லது ஒதுக்கம் பற்றி வெளிப்படுத்தி உதவவேண்டும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.09.2025இல் வெளியிடப்பெற்றது